**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093807

1. District / மாவட்டம் : கரூர் PS / காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு Year / ஆண்டு : 2019 FIR No / மு.த.அ. எண் : 07/19 Date / நாள் : 04.11.19

2. (i) Act சட்டம் : PC ACT 1988 AS AMENDED Sections பிரிவுகள் :
   (ii) Act சட்டம் : BY THE PC [AMENDMENT] Sections பிரிவுகள் : 7
   (iii) Act சட்டம் : ACT 2018 Sections பிரிவுகள் :
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் : Date from / நாள் முதல் : 04.11.19 Date to / நாள் வரை : 13.00 HRS
   Time Period / நேர அளவு : Time from / நேரம் முதல் : Time to / நேரம் வரை :
   (b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 04.11.19 Time / நேரம் : 17.00 HRS
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 04.11.19 Time / நேரம் : 18.15 HRS.

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 50 கி.மீ கிழக்கு
   Beat Number / முறைக் காவல் எண் : (b) Address / முகவரி : வேளாண்மை பொறியியல் துறை அலுவலகம் குளித்தலை, கரூர் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : District / மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : M. சுரேஷ் (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : A.K. கீர்த்தி
   (c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : 24.06.1977 (d) Nationality / நாட்டினம் : இந்தியன் (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue / வழங்கப்பட்ட நாள் : — Place of Issue / வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation / தொழில் : சுயதொழில் (g) Address / முகவரி : 9/202, லிங்கம் நகர், மேலபாண்டமங்கலம், திருமணி ரோடு, திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   P. கார்த்திக், உதவி பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை. குளித்தலை, கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / கைவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / கைவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .......................... Rank .......................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .......................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 4/11/2019.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 04.11.19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் M. REKHA,
Rank: நிலை ..........................No. எண் ..........
INSPECTOR OF POLICE
Vd AC, Karur

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.11.19. 18.15 HRS.



Karur

**Continuation of Karur Vigilance and Anti-Corruption FIR in Cr.No. 07/2019.**

பணிந்தனுப்பபடுகிறது.

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 04.11.2019 ஆம் தேதி 17.00 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திருச்சி மாவட்டம், குழுமணிரோடு, மேலபாண்டமங்கலம், கதவு எண். 9/202, லிங்கம் நகர் என்ற முகவரியைச் சேர்ந்த ஏ.கே.மூர்த்தி மகன் சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, கம்பியூட்டர் மூலம் தயார் செய்த புகாரை பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் M.சுரேஷ், வயது 42, த.பெ.ஏ.கே.மூர்த்தி, எண். 9/202, லிங்கம் நகர், மேலபாணடமங்கலம், குழுமணிரோடு, திருச்சி மாவட்டம் - 620102, பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர். அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் திருச்சியில் Dream Innovations என்ற பெயரில் தொழில் நிறுவனம் நடத்தி வருகிறேன். நான் கடந்த 2010 ஆம் ஆண்டு குளித்தலை வட்டம் இரணியமங்கலம் கிராமம், செம்மேட்டுப்பட்டி என்ற இடத்தில் 5 ஏக்கர் தரிசு நிலத்தை எனது குடும்பத்துடன் வாங்கி, எனது ஆர்வத்தினால், விவசாயம் செய்ய முற்பட்டு கொண்டு இருந்தேன். இதற்காக நான் Tractor வாங்க விரும்பி மத்திய அரசின் agrimachinery.nic.in என்ற வலைதளம் மூலம் என்னுடைய விபரங்களை இணையதளத்தில் Upload செய்து Tractor வாங்குவதற்கான மானியத்திற்காக குளித்தலை Kannan Agencies மூலமாக 13.08.2019 அன்று பதிவு செய்தேன். இதற்கான மொத்த தொகை பதிவு செலவு உட்பட ரூ.4.66,000/- யை Kannan Agencies வசம் பணம் செலுத்தினேன். பின்பு Kannan Agencies மூலமாக என்னுடைய தோட்டத்தில் வாகன பதிவு செய்யாமல் Tractor யை கள ஆய்வுக்காக 07.09.2019 அன்று delivery செய்தார்கள். அதே நாளில் குளித்தலை வேளாண்மை பொறியியல் துறையிலிருந்து உதவி பொறியாளர் திரு.P.கார்த்திக் என்பவர் கள ஆய்விற்காக மேற்படி என் தோட்டத்திற்கு வந்து நான் வாங்கிய Tractor யை ஆய்வு செய்து என்னுடைய விபரங்களை சரிபார்த்துவிட்டு சென்றார். பின்பு 13.09.2019 அன்று agrimachinery.nic.in என்ற வலைதளத்தை பார்வையிட்டபோது, எனக்கான மானியம் உறுதி செய்திருந்தது. பின்பு நான் உதவி பொறியாளர் திரு. P.கார்த்திக் என்பவரிடம் மானியம் குறித்து அலைபேசி வாயிலாக பலமுறை தொடர்பு கொண்டு கேட்டதற்கு பல காரணங்களை சொல்லி காலம் தாழ்த்தினார். 27.09.2019 ஆம் தேதி அன்று திருச்சி RTO அலுவலகத்தில் நான் வாங்கியிருந்த Tractor யை பதிவு செய்து, பதிவு சான்றை Kannan Agencies மூலம் பெற்றுக் கொண்டேன். பின்பு வாகன பதிவு ஆவணங்கள் தொடர்பாக என்னை நேரில் வந்து உதவி பொறியாளர் திரு. P.கார்த்திக் அவர்கள்

சந்திக்குமாறு சொன்னார். நான் 30.10.2019 ஆம் தேதி அன்று நேரில் அவரை சந்தித்த போது உதவி பொறியாளர் திரு. P.கார்த்திக் என்னிடம் அலுவலக நடைமுறைக்காக மானியத் தொகையில் 10% தனக்கு தரும்படி கேட்டார். எனக்காக மானியம் ரூ. 2,24,370/- தை அரசு ஒதுக்கியுள்ளது. அதன்படி உதவி பொறியாளர் திரு. P.கார்த்திக் என்பவர் என்னிடம் மானியத் தொகை 10% கணக்கில் ரவுண்டாக ரூ.22,500/- தரவேண்டும் என்று கறாராக கூறினார். நான் பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு இன்று 04.11.2019 தேதி மதியம் சுமார் ஒரு மணிக்கு மீண்டும் உதவி பொறியாளர் திரு. P.கார்த்திக் என்பவரை சந்தித்து ரூ.22,500/- லிருந்து கொஞ்சம் குறைத்துக் கொள்ள கூடாதா என்று கேட்டதற்கு குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டார். மானியத் தொகை உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்றால் நான் கேட்ட பணத்தை நாளைக்கு கொண்டு வரும்படியும், அலுவலகத்திற்குள் வராமல் அலைப்பேசியில் தகவல் சொல்லும்படியும், தானே வெளியில் வந்து வாங்கிக் கொள்வதாகவும் கூறினார். பின்பு நான் நாளை பணத்தை ஏற்பாடு பண்ணி கொண்டுவருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு உதவி பொறியாளர் திரு. P.கார்த்திக் அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட உதவி பொறியாளர் திரு. P.கார்த்திக் என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- M.சுரேஷ், 04.11.2019. Sir, Received the complaint on 04.11.2019 at 17.00 hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai. I am registering a case in Karur V&AC Cr.No.07/2019, u/s. 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) at 2018 on 04.11.2019 at ~~17.00~~ 18:15 hrs hrs and took up investigation Sd/- M.Rekha, 04.11.2019, (M.Rekha) Inspector of Police, V&AC, Karur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு. M.சுரேஷ் அவர்களின் அசல் புகார் மனு ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், கரூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

04.11.19

(M.ரேகா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கரூர்.
04.11.2019.